## சாதாரண தான தர்மங்கள்

கடமையான ஜ்ஸகாத் மற்றும் ஸதஃகதுல் ஃபித்ருவைத்தவிர, மார்க்கத்தைப் பின்பற்றுவோர் மனதில் மனிதர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அல்லாஹ்வின் அருட்கொடைகளான செல்வங்கள் அனைத்துமே உங்களிடத்தில் ஒப்படைக் கப்படும் அமானிதங்கள் என்ற உறுதியான நம்பிக்கை மற்றும் விசுவாச உணர்வினை இஸ்லாம் ஏற்படுத்துகின்றது. இந்தச் செல்வத்தின் உண்மை யான உரியுடையவனும் அதனை வழுங்குபவனும் அல்லாஹ் தஆலாதான் என்றும், உங்களுடைய மனங்களில் இச்செல்வத்தின்மீதான விருப்பம் அதனை வழங்கியவனையே மறந்துவிடும் அளவிற்கு மிகைத்துவிடக் கூடாது என்றும், எந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காக அவன் உங் களை இந்த உலகிற்கு அனுப்பியுள்ளானோ, அவை அதற்கான வசதிகள் பெறப்படாத காரணத்தினால் கடைபிடிக்கப்படாமலேயே இருந்துவிடக் கூடாது. ஆகவே, அல்லாஹ்வின் நாட்டம் மற்றும் அவனுடைய திருப் பொருத்தத்தை அடைவது உங்களுடைய இலட்சியமாக ஆக்கிக்கொண்டு, தாராளமாக மனம் திறந்து செலவு செய்யவேண்டும். இதன் காரணமாக, உங்களுடைய செல்வம் தீர்ந்துவிடாது, மாறாக, அது கூடிக்கொண்டுதான் இருக்கும். அல்லாஹ் தஆலா தானதர்மங்களைச் செய்பவர்களைப்பற்றிக் கூறுகின்றான்:

مَّثَلُ ٱلَّذِينَ يُنفِقُونَ أَمْوَٰلَهُمْ فِى سَبِيلِ ٱللَّهِ كَمَثَلِ حَبَّةٍ أَنۢبَتَتْ سَبْعَ سَنَابِلَ فِى كُلِّ سُنۢبُلَةٍ مِّاْئَةُ حَبَّةٍ ۗ وَٱللَّهُ يُضَٰعِفُ لِمَن يَشَآءُ ۗ وَٱللَّهُ وَٰسِعٌ عَلِيمٌ ﴿٢٦١﴾ البقر 261)

*பொருள்: அல்லாஹ்வுடைய வழியில் தங்களுடைய பொருளைச் செல வழிப்பவர்களுடைய செலவுக்கு உதாரணம், ஒரு தானிய விதையைப் பயி ரிடுவது போன்றதாகும். அதிலிருந்து ஏழு கதிர்கள் முளைகின்றன, ஒவ் வொரு கதிரும் நூறு தானிய மணிகளைக் கொண்டுள்ளது. (இவ்வாறு) அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு அவர்களுடைய நற்செயல்களின் பலன் களைப் பன்மடங்காக்கித் தருகிறான். மேலும், அல்லாஹ் அதிகம் அதிகம் வழங்குபவனும், யாவற்றையும் நன்கறிபவனுமாய் இருக்கின்றான் (அல் பஃகரஹ்:261).*

*மற்றொரு இடத்தில் கூறுகிறான்:*

لَن تَنَالُوا۟ ٱلْبِرَّ حَتَّىٰ تُنفِقُوا۟ مِمَّا تُحِبُّونَ ۚ ﴿٩٢﴾ آل عمران 92)

*பொருள்: உங்களுக்கு விருப்பமானவற்றை இறைவழியில் செலவழிக்காத வரையில் நீங்கள் நன்மையினை அடைந்திட முடியாது (ஆலு இம்ரான்:92)*

www.uzairfalahi.com

مَّن ذَا ٱلَّذِى يُقْرِضُ ٱللَّهَ قَرْضًا حَسَنًا فَيُضَـٰعِفَهُۥ لَهُۥٓ أَضْعَافًا كَثِيرَةً ۚ ﴿٢٤٥﴾ البقر 245 )

*பொருள்: அல்லாஹ்வுக்கு அழகியக் கடன் கொடுப்பவர்கள் உங்களில் யார் உள்ளனர்? (அப்படிக் கடன் கொடுத்தால்) அல்லாஹ் அதனைப் பன் மடங்காக்கி அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பான் (அல் பஃகரஹ்:245).*

ஸதஃகா மற்றும் தானதர்மங்களைச் செய்துகொண்டிருப்பது எவ்வளவு இன்றியமையாதது என்பது இறைத்தூதர் ﷺ அவர்களுடைய இந்த நபி மொழியிலிருந்து தெளிவாகின்றது. அவர்கள் ﷺ கூறுகின்றார்கள்:

**كُلُّ سُلَامَى مِنَ النَّاسِ عَلَيْهِ صَدَقَةٌ، كُلَّ يَوْمٍ تَطْلُعُ فِيهِ الشَّمْسُ ، تَعْدِلُ بَيْنَ الِاثْنَيْنِ صَدَقَةٌ، وَتُعِينُ الرَّجُلَ فِي دَابَّتِهِ فَتَحْمِلُهُ عَلَيْهَا، أَوْ تَرْفَعُ لَهُ عَلَيْهَا مَتَاعَهُ صَدَقَةٌ ، وَالْكَلِمَةُ الطَّيِّبَةُ صَدَقَةٌ، وَكُلُّ خُطْوَةٍ تَمْشِيهَا إِلَى الصَّلَاةِ صَدَقَةٌ، وَتُمِيطُ الْأَذَى عَنِ الطَّرِيقِ صَدَقَةٌ** مسلم )

*பொருள்: ஒவ்வொரு எலும்பு மூட்டின்மீதும் நாள்தோறும் மனிதர்கள் மீது ஸதஃகா கொடுப்பது வாஜிபானதாக ஆகிவிடுகிறது. நீங்கள் இரு மனிதர்களுக்கிடையே நியாமான முறையில் ஒன்றைத் தீர்த்து வைப்பதும் ஸதஃகாவாகும், ஒருவரைத் தன்னுடைய சவாரிமீது ஏறி அமர்வதில் அவருக்கு உதவுவது அல்லது அவருடைய சுமைகளைத்தூக்கிவிடுவதும் ஸதஃகாவாகும், ஒரு நல்ல வார்த்தையைக் கூறுவதும் ஸதஃகாவாகும், தொழுகைக்காக எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியும் ஸதஃகாவாகும், பாதையிலிருந்து தீங்கிழைக்கும் பொருளை அகற்றுவதும் ஸதஃகாவாகும் (முஸ்லிம்).*

ஸதஃகா மற்றும் தானதர்மங்களைச் செய்வது செல்வத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டது அல்ல, மாறாக, ஒரு மனிதன் தன்னுடைய ஆற்றல், திறமை, காலம் மற்றும் எந்த ஒன்றையும்கொண்டு ஸதஃகா செய்ய முடியும். ஸதஃகாவிற்காக ஒன்று அதிக அளவில் இருக்கவேண்டும் என்பதும் தேவையான ஒன்று அல்ல. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்:

**اتَّقُوا النَّارَ وَلَوْ بِشِقَّةِ تَمْرَةٍ فَمَنْ لَمْ يَجِدْ شِقَّةَ تَمْرَةٍ فَبِكَلِمَةٍ طَيِّبَةٍ** البخاري )

*பொருள்: நரக நெருப்பிலிருந்து ஒரு பேரீத்தப்பழக் கீற்றைக் கொடுத்தாவது உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள், பேரீத்தப்பழக் கீற்றும் உங்களுக்குக் கிடைக்கவில்லையென்றாலும் ஒரு நல்ல வார்த்தையைக் கூறியும் (அவ்வாறு செய்துகொள்ளலாம்)* (முஸ்லிம்).

### நயவஞ்சகத்தின் கேடுகள்

அல்லாஹ்வின் பாதையில் செலவழிப்பதில் மற்றவர்களுக்குக் காட்டிக் கொள்வதற்காகச் செய்வது, காட்சிப்பொருளாகவும் ஆக்குவது அதனையே

www.uzairfalahi.com

வீணழித்துவிடும் உயிர்க்கொல்லி விஷத்தைப்போன்றதாகும். ஒரு மனிதன் தன்னுடைய செல்வத்தையெல்லாம் செலவழித்துவிட்டாலும் மக்கள் அவனை வள்ளல், பெரிய மனதையுடையவர் என்று பாராட்டவேண்டும் என்ற எண்ணம் அவனுடைய மனதில் உண்டாகிவிடுமேயானால், அவன் செய்ததெல்லாம் மண்ணோடு மண்ணாகிவிடும். மனிதனுடைய மிகப் பெரிய வலுவின்மையே இதுதான், அவன் பிரபலமடைவதற்கும் காட்டிக் கொள்வதற்காகவும் துள்ளி எழுகின்றான், இவ்வகையிலான ஒரு தீப்பொறி அனைத்து நன்மையையும் எரித்து சாம்பலாக்கிவிடுகின்றது. இதுபோன்றே, ஒருவருக்குக் கொடுத்துவிட்டு சொல்லிக்காட்டுவதும் செய்த நன்மை யையே நாசமாக்கிவிடுகின்றது. ஆகவேதான், அல்லாஹ் தஆலா கூறுகின் றான்:

إِن تُبْدُوا۟ ٱلصَّدَقَـٰتِ فَنِعِمَّا هِىَ ۖ وَإِن تُخْفُوهَا وَتُؤْتُوهَا ٱلْفُقَرَآءَ فَهُوَ خَيْرٌ لَّكُمْ ۚ وَيُكَفِّرُ عَنكُم مِّن سَيِّـَٔاتِكُمْ ۗ وَٱللَّهُ بِمَا تَعْمَلُونَ خَبِيرٌ ﴿٢٧١﴾ ( البقر 71؛ )

*பொருள்: நீங்கள் தர்மத்தை வெளிப்படையாகச் செய்வீர்களானால் அது வும் நல்லதுதான், நீங்கள் இவற்றை யாருக்கும் தெரியாமல் தேவையுடை யோருக்குக் கொடுப்பீர்களானால் அது இன்னும் உங்களுக்குச் சிறந்த தாகும். மேலும், இத்தகையச் செயல்களின் காரணமாக உங்கள் தீமை களை அல்லாஹ் அழித்துவிடுகிறான். மேலும், அல்லாஹ் நீங்கள் செய் வதை நன்கு அறிபவனாக இருக்கின்றான் (அல் பஃகரஹ்:71)*

மற்றொரு இடத்தில் கூறுகிறான்:

وَمَا تُنفِقُونَ إِلَّا ٱبْتِغَآءَ وَجْهِ ٱللَّهِ ۚ ﴿٢٧٢﴾ ( البقر 72؛ )

*பொருள்: அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெறுவதைத்தவிர வேறு எதற்காகவும் நீங்கள் செலவு செய்வதில்லையே (அல் பஃகரஹ்:272).*

எவர்கள் ஒருவருக்குக் கொடுத்துவிட்டு சொல்லிக்காட்டுவார்களோ மற் றும் மற்றவர்களுக்குக் காட்டிக்கொள்வதற்காச் செலவு செய்வார்களோ அவர்களுடைய உதாரணத்தைப்பற்றி அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ لَا تُبْطِلُوا۟ صَدَقَـٰتِكُم بِٱلْمَنِّ وَٱلْأَذَىٰ كَٱلَّذِى يُنفِقُ مَالَهُۥ رِئَآءَ ٱلنَّاسِ وَلَا يُؤْمِنُ بِٱللَّهِ وَٱلْيَوْمِ ٱلْـَٔاخِرِ ۖ فَمَثَلُهُۥ كَمَثَلِ صَفْوَانٍ عَلَيْهِ تُرَابٌ فَأَصَابَهُۥ وَابِلٌ فَتَرَكَهُۥ صَلْدًا ۖ لَّا يَقْدِرُونَ عَلَىٰ شَىْءٍ مِّمَّا كَسَبُوا۟ ۗ ﴿٢٦٤﴾ ( البقر 64؛ )

www.uzairfalahi.com

*பொருள்: இறைநம்பிக்கை கொண்டோரே, அல்லாஹ்வின்மீதும் மறுமை நாளின் மீதும் ஈமான் கொள்ளாமல் மனிதர்களுக்குக் காண்பிப்பதற்காகவே தனது பொருளைச் செலவு செய்பவனைப்போல நீங்களும் கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், மனம் புண்படச்செய்தும் உங்களுடைய தானதர்மங்களைப் பாழாக்கிவிடாதீர்கள். இப்படிப்பட்டவன் செய்யும் செலவுக்கு உதாரணம், மண் மூடிய ஒரு வழுக்குப் பாறையைப் போன்றதாகும், அதன்மீது பெருமழை பெய்து (அதை மூடியிருந்த மண்ணை அடித்துக்கொண்டு போய்) அதை வெறும் பாறையாக்கிவிட்டது. இத்தகையவர்கள் செய்யம் தானதர்மங்களால் எதையும் (எந்த நன்மையையும்) ஈட்ட முடியாது. (அல் பஃகரஹ்:264).*

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒரு நபிமொழியில் கூறுகின்றார்கள், எந்த ஏழு வகையான மனிதர்களுக்கு அல்லாஹ் தஆலா அர்ஷின் நிழலைத்தவிர வேறு நிழலே இல்லாத அந்த நாளில் தன்னுடைய அர்ஷின்கீழ் நிழலில் இடமளிப்பானோ (அவர்களில் ஒருவர்) தன்னுடைய வலது கை செய்த கொடையினை அவருடைய இடது கைக்கே தெரியாத வகையில் செலவுசெய்யும் ஒருவராவான். (புக்ஹாரி, முஃஸ்லிம்). செல்வத்தைப் இச்சை மற்றும் பேராசையின் காரணமாகச் சேமித்து வைப்பவனைப்பற்றி அல்லாஹ் எச்சரித்துக் கூறுகின்றான்:

وَٱلَّذِينَ يَكۡنِزُونَ ٱلذَّهَبَ وَٱلۡفِضَّةَ وَلَا يُنفِقُونَهَا فِي سَبِيلِ ٱللَّهِ فَبَشِّرۡهُم بِعَذَابٍ أَلِيمٍ ﴿٣٤﴾ التوبة 34)

*பொருள்: எவர்கள் தங்கத்தையும் வெள்ளியையும் சேகரித்து வைத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாமலிருக்கின்றார்களோ அவர்களுக்குத் துன்புறுத்தும் தண்டனை இருக்கிறது எனும் நற்செய்தியினை நீர் அறிவிப்பீராக (அத்தவ்பா:34)*

அல்லாஹ் தஆலா வழங்க மனமில்லாத, கஞ்சத்தனமான பழக்கத்தினை விரும்புவதில்லை மற்றும் அவற்றைத் தவிர்த்துக்கொள்பவர்களை வெற்றியடைந்தவர்களாகக் கருதுகின்றான்:

وَيُؤۡثِرُونَ عَلَىٰٓ أَنفُسِهِمۡ وَلَوۡ كَانَ بِهِمۡ خَصَاصَةٞۚ ﴿٩﴾ الحشر 9)

*பொருள்: மேலும், தாங்களே தேவையுள்ளவர்களாக இருந்தாலும்கூட அவர்கள் தன்னைவிடப் பிறருக்கே முன்னுரிமை வழங்குகின்றனர் (அல் ஹஷ்ர்:9).*

www.uzairfalahi.com

மற்றொரு இடத்தில் கூறுகிறான்:

هَٰٓأَنتُمۡ هَٰٓؤُلَآءِ تُدۡعَوۡنَ لِتُنفِقُواْ فِي سَبِيلِ ٱللَّهِ فَمِنكُم مَّن يَبۡخَلُۖ وَمَن يَبۡخَلۡ فَإِنَّمَا يَبۡخَلُ عَن نَّفۡسِهِۦۚ
وَٱللَّهُ ٱلۡغَنِيُّ وَأَنتُمُ ٱلۡفُقَرَآءُۚ وَإِن تَتَوَلَّوۡاْ يَسۡتَبۡدِلۡ قَوۡمًا غَيۡرَكُمۡ ثُمَّ لَا يَكُونُوٓاْ أَمۡثَٰلَكُم ﴿٣٨﴾ (محمد 38)

*பொருள்: இதோ பாருங்கள், அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள் என்று உங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. இவ்விஷயத்தில் கஞ்சத்தனம் காட்டுகின்ற சிலர் உங்களில் இருக்கின்றனர். ஆனால், யார் கஞ்சத்தனம் செய்துகொண்டிருக்கின்றாரோ அவர் உண்மையில் தன் விஷயத்திலேயே கஞ்சத்தனம் செய்துகொண்டிருக்கின்றார். அல்லாஹ்வோ தேவைகள் அற்றவன், நீங்கள்தாம் அவன் பக்கம் தேவையுடையோர்களாய் இருக்கின்றீர்கள். நீங்கள் புறக்கணித்துவிட்டால் அல்லாஹ் உங்களுடைய இடத்தில் வேறு ஒரு சமுதாயத்தைக் கொண்டுவருவான். மேலும், அவர்கள் உங்களைப்போல் இருக்கமாட்டார்கள் (முஹம்மத்:38)*

உலக ஆதாரங்கள் மற்றும் செல்வம் அனைத்தும் இஸ்லாத்தில் தடுக்கப்படவோ மறுக்கப்படவோ இல்லை, மாறாக, அவை அல்லாஹ்வுடைய அருட்கொடைகளாகவும் அவனுடைய கருணையாகவும் கருதப்படுகின்றன. அவற்றை அல்லாஹ் தஆலா قِيَاماً لِلنَّاس என்று குறிப்பிட்டுள்ளதோடு, அவற்றைப் அடைவதற்காக முயற்சிகளை மேற்கொள்வதை ஊக்குவித்தும் உள்ளான் . அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

فَإِذَا قُضِيَتِ ٱلصَّلَوٰةُ فَٱنتَشِرُواْ فِي ٱلۡأَرۡضِ وَٱبۡتَغُواْ مِن فَضۡلِ ٱللَّهِ ﴿١٠﴾ (الجمعة 10)

*பொருள்: பின்னர், தொழுகை நிறைவேற்றப்பட்டுவிட்டால் பூமியில் பரவிச்சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள் (அல் ஜுமுஆ:10)*

இஸ்லாத்தில்துறவறம் என்பது கிடையாது. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

قُلۡ مَنۡ حَرَّمَ زِينَةَ ٱللَّهِ ٱلَّتِيٓ أَخۡرَجَ لِعِبَادِهِۦ وَٱلطَّيِّبَٰتِ مِنَ ٱلرِّزۡقِۚ قُلۡ هِيَ لِلَّذِينَ ءَامَنُواْ فِي ٱلۡحَيَوٰةِ ٱلدُّنۡيَا
خَالِصَةً يَوۡمَ ٱلۡقِيَٰمَةِ ﴿٣٢﴾ (الأعراف 32)

*பொருள்: நபியே, அவர்களிடம் நீர் கேட்பீராக, அல்லாஹ் தன் அடிமைகளுக்காகத் தோற்றுவித்துள்ள அலங்காரத்தையும், மேலும், அவன் வழங்கியுள்ள தூய்மையான உண்பொருட்களையும் தடை செய்தது யார்? நீர் கூறும், இறைநம்பிக்கையாளர்களுக்கு இப்பொருட்கள் அனைத்தும் உலக வாழ்க்கையில் கிடைக்கும், மறுமை நாளில் அவர்களுக்கே அவை உரியனவாயிருக்கும் (அல் ஆஃராஃப்:32)*

www.uzairfalahi.com

இஸ்லாம் இந்த உலகம் மற்றும் அதிலுள்ள அலங்காரங்களை,செல்வ செழிப்பாயினும் சரி அல்லது எந்த சாதனங்களாயினும், அவற்றின் மீதான ஆசை மற்றும் விருப்பம் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர்மீதான அன்பைவிட அதிகமாகவும் உண்மையான பாதையினைக் கடைபிடிப் பதில் இடையூறாகவும் ஆகிவிடுமானால், அவற்றை அல்லாஹ் ஒரு போதும் விரும்புவதில்லை, இவ்வகையில், அல்லாஹ் தஆலா கூறுகின் றான்:

قُلْ إِن كَانَ ءَابَآؤُكُمْ وَأَبْنَآؤُكُمْ وَإِخْوَٰنُكُمْ وَأَزْوَٰجُكُمْ وَعَشِيرَتُكُمْ وَأَمْوَٰلٌ ٱقْتَرَفْتُمُوهَا وَتِجَٰرَةٌ تَخْشَوْنَ كَسَادَهَا وَمَسَٰكِنُ تَرْضَوْنَهَآ أَحَبَّ إِلَيْكُم مِّنَ ٱللَّهِ وَرَسُولِهِۦ وَجِهَادٍ فِى سَبِيلِهِۦ فَتَرَبَّصُوا۟ حَتَّىٰ يَأْتِىَ ٱللَّهُ بِأَمْرِهِۦ ۗ وَٱللَّهُ لَا يَهْدِى ٱلْقَوْمَ ٱلْفَٰسِقِينَ ﴿٢٤﴾ (التوبة 24)

பொருள்: *நபியே, நீர் கூறிவிடுவீராக, உங்கள் தந்தையர், உங்கள் பிள்ளைகள், உங்கள் சகோதரர்கள், உங்கள் மனைவியர், உங்களுடைய உறவினர்கள், நீங்கள் சம்பாதித்த செல்வங்கள் மற்றும் தேக்கநிலை ஏற்பட்டுவிடுமோ என்று நீங்கள் அஞ்சுகின்ற உங்களுடைய வாணிபம் மற்றும் உங்களுக்கு விருப்பமான இல்லங்கள் ஆகியவை அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும்விட உங்களுக்கு நேசமானவையாக இருந்தால், அல்லாஹ் தன்னுடைய தீர்ப்பினை உங்களிடம் செயல்படுத்தும்வரை நீங்கள் எதிர்ப்பார்த்திருங்கள், அல்லாஹ் தீய சமுதாயத்தினருக்கு நேர்வழிகாட்டுவதில்லை (அத்தவ்பா:24).*

www.uzairalahi.com

* * *